**செய்தி வெளியீடு எண்.221** **நாள்.29.4.2009**

# பன்றி (ப்ளூ) காய்ச்சல்
# (Swine Flu)

பன்றிப்ளூ காய்ச்சல் என்பது H1N1 என்ற ஒரு வகை வைரஸால் பரவக்கூடிய நோய். இது பெரும்பாலும், பன்றிகளில் பெருவாரியாக காணப்படும். இது பன்றிகளின் சுவாசக் குழாயை பாதிக்கும். பன்றிகளில் இறப்பை ஏற்படுத்தும். இந்நோய், பன்றி வளர்ப்பில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு, பரவ வாய்ப்பு உள்ளது.

பாதிக்கப்பட்ட ஒரு மனிதனின் தும்மல் மற்றும் இருமல் மூலமும், நோய் தொற்று உள்ள ஒரு மனிதனின் உடைகளை கையாள்வதன் மூலம் மற்றும் தொற்றுள்ளவர் அருகில் வாழ்பவர்களுக்கும் இந்நோய் பரவ வாய்ப்பு உள்ளது. சிலசமயங்களில் இவ்வைரஸ் கொண்ட பொருட்களை தொட்ட கைகளினால் வாய் மற்றும் மூக்குகளைத் தொடுவதால் பரவுகிறது.

தற்பொழுது அமெரிக்கா, மெக்சிக்கோ மற்றும் ஐரோப்பா ஆகிய நாடுகளில் இந்நோயின் தாக்கம் அதிகம் உள்ளது.

**இந்நோயின் அறிகுறிகள் :**

- காய்ச்சல், இருமல், தும்மல், தொண்டைப்புண், பசியின்மை, உடல்வலி, தலைவலி ஆகியவை ஆகும்.
- இந்நோய் பெரும்பாலும் 20 வயது முதல் 50 வயது உடையவர்களுக்கு அதிகம் பரவ வாய்ப்பு உள்ளது.

இந்தியாவில் பன்றி ப்ளூ காய்ச்சலுக்கான அறிகுறிகள் காணப்படவில்லை என்றாலும் அனைத்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

விமான நிலையம் மற்றும் துறைமுகங்களில் கண்காணிப்புப் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. விமான நிலையம் மற்றும் துறைமுகங்களின் வழியாக அயல் நாடுகளில் இருந்து வரும் பயணிகளை பரிசோதிக்க மருத்துவக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட துணை இயக்குநர் சுகாதாரப் நலப்பணிகளுக்கும் பன்றி (புளூ) காய்ச்சல் தமிழ் நாட்டில் பரவாமல் இருக்க எடுக்கப்பட வேண்டிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், பன்றிகள் அதிகம் உள்ள பகுதிகளை ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பது குறித்தும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

சர்வதேச சுகாதார முறைப்படி பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து வரும் பயணிகளை பரிசோதித்து, பாதிப்பு உள்ள நபர்களை தனிமைப்படுத்துவதற்கு அனைத்து அரசு

மருத்துவமனைகளிலும் மற்றும் தொற்று நோய் மருத்துவமனையிலும், படுக்கை வசதிகளுடன் கூடிய தனிமை வார்டுகளை அமைத்து சிகிச்சை அளிக்க ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்குரிய இந்நோய் தொற்று கொண்ட நபர்களிடமிருந்து ஆய்வக பரிசோதனைக்காக சுவாசக் குழாய் திசு மற்றும் தொண்டைக் குழி திசு (Nasal Swab, Throat Swab) மாதிரிகள் எடுத்து டெல்லியிலுள்ள தேசிய தொற்று நோய் சிகிச்சை நிறுவனத்திற்கு அனுப்பி வைக்க அனைத்து மாவட்ட சுகாதார மையங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் பன்றிகளை மக்கள் வசிக்கும் பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்த அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாகத்திற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது.

ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்களை மக்களுக்கு பன்றி ப்ளூ காய்ச்சலைப் பற்றிய6 விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தனியார் மருத்துவமனைகளில் காய்ச்சல் கண்காணிப்பை தீவிரப்படுத்தவும், சந்தேகத்திற்குரிய நோய் தொற்று கொண்ட நபர்களைப் பற்றி உடனுக்குடன் இயக்குநகரத்திற்கு தெரிவிக்குமாறு துணை இயக்குநர் சுகாதார நலப்பணிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மக்களுக்கு, பன்றி ப்ளூ காய்ச்சல் பற்றிய அறிகுறிகள் பற்றியும், அவ்வாறு சந்தேகத்திற்குரிய நோய் தொற்று கொண்ட மனிதனை தனிமைப் படுத்தி உடனே அருகிலுள்ள சுகாதார மையத்திற்கு தெரியப்படுத்தவும், மேலும் மற்றவர்களுக்கு பரவாமல் இருக்க மூக்கினை துணியால் கட்டிக்கொள்ளவும், பாதிக்கப்பட்ட மனிதனின் துணிகளை கையாளாமல் இருக்கவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், போதுமான அளவு மருந்துகள் (Tami Flu) இருப்பில் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்காய்ச்சலின் அறிகுறிகள் தென்பட்டவுடன் சிகிச்சை அளிப்பதன் மூலம், இந்நோய் பரவாமல் தடுப்பதுடன் உயிர் இழப்பையும் தவிர்க்கலாம்.

தமிழக அரசு மேற்கொண்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளினாலும், இந்தியாவின் தட்ப வெப்ப நிலையினாலும் இவ்வைரஸ் கிருமி இந்தியாவில் பரவ வாய்ப்பில்லை.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9